முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுடன் நேற்று (11.5.2023) சென்னை, காமராஜர் சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட முனைவர் டி.ஆர்.பி. ராஜா மற்றும் துறைகள் மாற்றியமைக்கப்பட்ட அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர். உடன் அமைச்சர் பெருமக்கள் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் நேற்று (11.5.2023) சென்னை, காமராஜர் சாலையில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட முனைவர் டி.ஆர்.பி. ராஜா மற்றும் துறைகள் மாற்றியமைக்கப்பட்ட அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர். உடன் அமைச்சர் பெருமக்கள் உள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (11.05.2023) தலைமைச் செயலகத்தில், துறைகள் மாற்றியமைக்கப்பட்ட அமைச்சர் பெருமக்கள் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முனைவர் பழனிவேல் தியாகராஜன், பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ் மற்றும் புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்ட தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள்.

சென்னை கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக கூட்ட அரங்கில் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (11.05.2023) பத்திரிகையாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு உறுப்பினர் அட்டையினை வழங்கினார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா,சட்டமன்ற உறுப்பினர் ஜெ.ஜான் எபினேசர், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த. மோகன், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர் மு.அருணா, ஆகியோர் உள்ளனர்.

அரசியல் சாசனத்திற்கு விரோதமாக செயல்படும்

ஆளுநரை பதவி நீக்க உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திடுக!

தமிழ்நாடு அரசுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்!

சென்னை, மே 12- அரசியல் சாசனத்திற்கு விரோதமாக செயல்படும் தமிழக ஆளுநரை பதவி நீக்கம் செய்ய உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

சென்னையில் நடைபெற்ற கட்சியின் மாநிலக்குழு கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

தமிழகத்தின் ஆளுநர் ஆர். என். ரவி தொடர்ந்து அரசியல் சாசனத்திற்கு விரோதமாகவும், ஆளுநருக்கு வகுத்து அளிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு முரணாகவும் செயல்பட்டு வருகிறார். இதுகுறித்து ஏற்கனவே எண்ணற்ற புகார்கள் எழுந்துள்ளன. ஒன்றிய அரசு, ஆளுநருக்கு உரிய அறிவுரைகள் வழங்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனுவும், சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஆளுநர் தனது போக்கினை மாற்றிக் கொள்ளவில்லை. மாறாக, இரண்டாண்டு சம்பவங்களை எல்லாம் தொகுத்து கடந்த மே 4 அன்று ஒரு ஆங்கில நாளேட்டிற்கு ஆளுநர் ஆர்.என். ரவி பேட்டி என்கிற பெயரில் உண்மைக்கு மாறானவைகளையும், அவதூறுகளையும் தெரிவித்துள்ளார்.

வழக்கம்போலவே தனது வரம்பை மீறி அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு தமிழகத்தின் மீதும், தமிழ்நாடு அரசின் மீதும், தமிழ்நாட்டு மக்கள் மீதும் அவதூறுகளை அள்ளிப்பொழிந்துள்ளார். குற்றச் செயல்கள் நடப்பதால் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதாக சொல்லும் முன்னாள் ஐ.பி.எஸ்.அதிகாரியான ஆளுநர் சட்டம் ஒழுங்கு அல்லது அமைதி என்பது தனிப்பட்ட சம்பவங்கள் என்று பொருள் கொள்ளாது என்பதை அறியாதவர் அல்ல. குற்றங்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருந்தாலோ, குற்றவாளிகளின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்தாலோ அல்லது ஒரே மாதிரியான குற்றங்கள் தொடர் நிகழ்வாக இருந்தாலோ அவை தீவிரமான குற்றங்களாக இருந்தாலோ மட்டுமே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்வதற்கு வாய்ப்பிருக்கிறது. அதைவிடுத்து சில சம்பவங்களை வைத்துக் கொண்டு மனம் போன போக்கில் தமிழகம் அமைதியற்ற மாநிலம் என ஆளுநர் குறிப்பிடுவது தமிழ் நாட்டு மக்களை இழிவு படுத்துவதாகும்.

தன்மீது தாக்குதல் நடத்தியதாகவும், தான் கொடுத்தபுகார் மீது முதல் தகவல் அறிக்கையே கூட பதிவு செய்யப் படவில்லை என்றும் அப்பட்டமாக பொய் சொல்லியிருக்கிறார். இவரது வாகனம் சென்ற பிறகு சிலர் கருப்புக்கொடி கட்டிய கம்பை வீசியிருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறொன்றும் நடந்ததாக எங்கும் பதிவாகவில்லை. ஆனால் 19.4.2022 அன்று மயிலாடுதுறை காவல் நிலையத்தில் 312/2022 என்ற எண்ணில் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் ஆளுநர் கொடுத்த புகாரின் மீது வழக்குப் பதிவு செய்யவில்லை என ஆளுநர் காவல்துறையை குற்றம் சொல்வது கடும் கண்டனத்திற்குரியதாகும். இதேபோன்று தமிழ்நாடு அரசாங்கமும், சமூக நலத்துறையும், காவல்துறையும் சிதம்பரம் தீட்சிதர்கள் மத்தியில் வழக்கமாக நடைபெறும் குழந்தை திருமணத்தை தடுப்பதற்கு எடுத்த முயற்சிகளை திசை திருப்ப ஆளுநர் முயல்கிறார். இதற்கு முன்பும் இருவிரல் பரிசோதனை நடத்தப்பட்டதாக இவர் எழுப்பிய கேள்விக்கு தமிழ்நாடு டி.ஜி.பி. முறையாக அப்படி எதுவும் நடக்கவில்லை என பதில் தெரிவித்துள்ள நிலையில், மீண்டும் பொதுவெளியில் இப்பிரச்சனையை எழுப்புவது குழந்தை திருமணத்தில் ஈடுபடுவோர் மற்றும் அதற்கு துணை போனவர்களை காப்பாற்றுவதற்கும், அவர் தொடர்ச்சியாக பேசி வரும் சனாதனத்தை காப்பாற்றுவதற்காகவும் ஆளுநரின் நடவடிக்கைகள் அமைந்துள்ளது தெளிவு.

இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் உள்ள நூலகங்களில் அனைத்து மொழி புத்தகங்கள் இருப்பது போலவும், தமிழ்நாட்டில் பிற மொழி புத்தகங்கள் இல்லை என்பது போலவும் அவதூறுகளை அள்ளித்தெளித்துள்ளார். இப்படி அரசுப்பணத்தை முறையின்றி செலவழித்தது, பொறுப்பின்றி சட்டமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்தது, மசோதாக்களுக்கு ஒப்புதல் கொடுக்காமலிருப்பது, தனியார் அரசு சாரா அமைப்புக்கு ஏஜெண்டு போல அரசாங்கத்தை குறை கூறுவது என்று ஒவ்வொரு அம்சத்திலும் மிக மோசமாகவும், தவறான உள்நோக்கத்துடனும் இந்த பேட்டி அளித்துள்ளார்.

எனவே, ஆளுநரின் இத்தகைய சட்டவிரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகளை இனியும் அனுமதிப்பது முறையல்ல. ஏற்கனவே, ஒன்றிய அரசிடம் அளித்துள்ள புகார்கள் மீது நடவடிக்கை எதுவும் மேற்கொள்ள மறுத்துள்ளதுடன் ஆளுநரை தங்களுக்குச் சாதகமாக ஒன்றிய அரசு இயக்கி வருவது பட்டவர்த்தனமாக வெளிப்பட்டுள்ளது. இந்நிலையில் அரசியல் சாசன வரம்புகளுக்கு மீறி செயல்படும் ஆளுநரை பதவி நீக்கம் செய்ய வற்புறுத்தி உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்குத் தொடுக்க வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு வேண்டுகோள் விடுக்கிறது.

இவ்வாறு அக்கட்சியின் மாநிலக் குழுக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தலைமைச் செயலகத்தில் நேற்று (11.05.2023) பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ் தலைமையில், துறையின் செயல்பாடுகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார். உடன் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை முதன்மை செயலாளர் ஆ. கார்த்திக் பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் மற்றும் ஆவின் மேலாண்மை இயக்குநர் மருத்துவர் ந.சுப்பையன் ஆவின் இணை மேலாண்மை இயக்குநர் திருமதி கே.எம். சரயு, ஆகியோர் உள்ளனர்.

தமிழ்நாடு சிட்கோவில் நடப்பு ஆண்டில் நிறைவேற்ற வேண்டிய

ரூ.319.41 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களை விரைந்து முடிக்க வேண்டும்!

சிட்கோ ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் உத்தரவு!

சென்னை, மே 12- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று (11.5.2023) கிண்டியில், தமிழ்நாடு சிட்கோவால் நிறைவேற்றப்படும் திட்டங்கள் குறித்த ஆய்வு கூட்டத்தில் பேசியதாவது:-

"பொது வசதி மைய திட்டத்தின் கீழ் ரூ.101.19 கோடி மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் முடிக்கப்பட வேண்டிய பின்னலாடை குழுமம் திருப்பூர், மரச்சா மான்கள் குழுமம்சேலம், ஆடை குழுமம், திருப்பூர், அச்சு மற்றும் பேக்கிங் குழுமம் ஒசூர் இயந்திர கட்டுமான பணிகள் குழுமம் - பெரம்பலூர், நெசவு குழுமம் ஈரோடு, கம்பளி ஆடை குழுமம் நீலகிரி, தங்க நகை குழுமம் திருநெல்வேலி ஆகிய 8 திட்டங்கள் நடப்பு ஆண்டிற்குள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டும்.

புதிய தொழிற்பேட்டை அமைக்கும் திட்டத்தின் கீழ் ரூ.218.22 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்ட திருச்சி மாவட்டம் - மணப்பாறை, திருவள்ளூர் மாவட்டம் - காவேரிராஜபுரம், செங்கல்பட்டு மாவட்டம் - கொடூர், மதுரை மாவட்டம் - சக்கிமங்கலம் ஆகியவற்றில் மனைகள் மேம்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றுக்கான அரசுத் துறை அனுமதிகளை விரைந்து பெற்று, ஒரு மாத காலத்திற்குள் திறந்து வைக்கப்பட வேண்டும்.

தனியார் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டத்தின் கீழ் ரூ. 17.57 கோடி மதிப்பீட்டில் புதிதாக அறிவிக்கப்பட்ட கோயம்புத்தூர் மாவட்டம் பேரறிஞர் அண்ணா தொழிற் கூட்டுறவு தொழிற்பேட்டை, ரூ. 18.13 கோடி மதிப்பீட்டில் கோசி மா தொழிற்பேட்டை ஆகிய வற்றின் சிறப்பு நோக்கு ஊர்தி குழுக்களை தொடர்ந்து சந்தித்து, அவர்களின் பங்களிப்பு தொகையை பெற்று பணிகளை விரைந்து முடிக்க உரிய அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பொது உற்பத்தி மைய திட்டத்தின் கீழ் ரூ. 12.81 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் கோயம்புத்தூர் மாவட்டம் - வெள்ளலூர் வார்ப்பு குழுமம், மதுக்கரை பொறியியல் குழுமம், வேலூர் மாவட்டம், குடியாத்தம் தீப்பெட்டி குழுமம் ஆகியவற்றில் நடைபெற்று வரும் கட்டிட பணிகள் தரத்துடன் அமைய வேண்டும். இதற்கான இயந்திரங்கள் கொள்முதல்களை உரிய காலத்திற்குள் பெற்று நிறுவ வேண்டும்.

பெருங்குழும திட்டத்தின் கீழ் ரூ. 47.61 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம் - திருமுடிவாக்கம் - துல்லிய உற்பத்தி குழுமம், மாண்புமிகு முதல்வர் அவர்களால் ரூ. 155 கோடி மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டப்பட்ட விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் - மருந்தியல் குழுமம் மற்றும் அம்பத்தூர், கோயம்புத்தூர் தொழிற்பேட்டைகளில் ரூ.51.47 கோடி மதிப்பீட்டில் 1,310 தொழிலாளர்கள் தங்கும் விடுதிகள் கட்டும் பணிகள் ஆகிய பணிகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்பாகவே முடிக்கும் வகையில் அலுவலர்கள் முனைப்புடன் செயலாற்ற வேண்டும்.

2022-23-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்களான கடலூர் மாவட்டம், கடாம்புலியூர், தூத்துக்குடி மாவட்டம் லிங்கம்பட்டி, கடலூர் மாவட்டம், மதவேடு தனியார் தொழிற்பேட்டையும், ஆகிய தொழிற்பேட்டைகளுக்கான நில மெடுப்பு பணிகள் நிறைவுற்ற நிலையில், மனை மேம்பாட்டு பணிகளை தொடங்க வேண்டும்.

விருதுநகர்ஆயத்த ஆடை மகளிர் நெசவு குழுமம், கோயம்புத்தூர் மாவட்டம் சின்னவேடம்பட்டி அலுமினிய அச்சு குழுமம், விருத்தாசலம் - பீங்கான் மின்காப்பு உபகரண குறு குழுமம், ஈரோடுமஞ்சள் தூள் உற்பத்தி குறு குழுமம், பவானிஜமக்காள உற்பத்தி குறு குழுமம் ஆகியவற்றிற்கான பொது வசதி மையங்கள் அமைப்பதற்கான ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டுள்ள நிலையில் உடனடியாக இப்பணிகளை துவங்கி முடிக்க வேண்டும்.

சிட்கோ தொழிற்பேட்டையின் கிளை மேலாளர்கள், மனை தொகை, வாடகை, பராமரிப்பு கட்டணம் ஆகியவற்றில் நிலுவை தொகை அதிகம் உள்ளது. அதனை விரைந்து வசூலிக்க வேண்டும். தொழிற்பேட்டைகளை சுத்தமாகவும், முறையாகவும் பராமரிக்க வேண்டும். தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் நலச் சங்கங்களை அமைத்து, அவர்கள் மூலமாக பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்"

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்தார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் வி.அருண்ராய், சிட்கோ, மேலாண்மை இயக்குநர் திருமதி சோ. மதுமதி, சிட்கோ பொது மேலாளர் திருமதி.ரேகா, கண்காணிப்பு பொறியாளர் மற்றும் கிளை மேலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமை! அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் முன்னிலை!

நெல்லையில் ரூ.5 கோடியில் வண்ணமீன் கண்காட்சியகம் - விற்பனையகம்!

அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்!

நெல்லை, மே 12- நெல்லையில் மாவட்ட அறிவியல் மையம் அருகில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் வண்ண மீன் கண்காட்சியகம் மற்றும் வண்ண மீன் விற்பனையகம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராம தொழில் வாரிய அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பங்கேற்று அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்.

நெல்லையில் மாவட்ட அறிவியல் மையம் அருகில் கொக்கிரகுளத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூபாய் 5 கோடி மதிப்பில் வண்ண மீன் காட்சியகம் மற்றும் வண்ண மீன் சில்லறை விற்பனையகம் அடிக்கல் நாட்டு விழா நிகழ்வு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன்,

நெல்லை மத்திய மாவட்டச் செயலாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.,நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நெல்லை மாநகராட்சி மேயர் பி.எம். சரவணன், மாநகராட்சி ஆணையர் சிவகிருஷ்ண மூர்த்தி, துணை மேயர் ராஜ், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், தச்சை மண்டல தலைவர் ரேவதி,மீனவர் அணி துணை செயலாளர் எரிக் ஜூடு, அதிகாரிகள்அமல் சேவியர், சரவணகுமார், புஷ்ரா ஷப்னம் கழக மகளிர் அணி அனிதா, தேவிகா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பம்மல் தெற்கு பகுதி தி.மு.க சார்பில் கழக அரசின் இரண்டாண்டு சாதனை விளக்கப் பொது கூட்டம் நாகல்கேணிடாக்டர் அம்பேத்கர் நகரில் தாம்பரம் மாநகராட்சி மண்டலம்1 குழுத் தலைவர்,பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் வே.கருணாநிதி தலைமையில் வட்ட கழக செயலாளர் பி.ஸ்ரீதர் வரவேற்புரையில் பகுதி கழக நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் முன்னிலையில் குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் /காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் தா.மோ.அன்பரசன்,தலைமை கழக பேச்சாளர் முரசொலி மூர்த்தி, தீர்மானக்குழு செயலாளர் மீ.ஆ.வைத்திலிங்கம், இ.கருணாநிதி எம்.எல்.ஏ, துணை மேயர் கோ.காமராஜ்,மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன், வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கே.நெப்போலியன் ஆகியோரது சிறப்புரையில் நடைபெற்றது. பம்மல் நகர இளைஞர் அணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு நன்றி கூறினார்.

திருவள்ளூர் ஒன்றியம் பேரத்தூர் ஊராட்சி உட்பட்ட நத்த கோவில்திப்பை கிராமத்தில் விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கை கேற்ப புதிய நேரடி கொள்முதல் நிலையத்தை பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணசாமி விவசாயிகள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். உடன் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஜெயசீலிஜெயபாலன், ஒன்றிய கழகச் செயலாளர் ஆர். ஜெயசீலன், நெல் கொள்முதல் அலுவலர் செங்குட்டுவன், பொதுக்குழு உறுப்பினர் த. எத்திராஜ், மாவட்ட கவுன்சிலர் டி. தென்னவன், ஒன்றிய கவுன்சிலர் சாந்தி தரணி, ஊராட்சி மன்ற தலைவர் முத்துமாரி தேவன், ஒன்றிய நிர்வாகிகள் கே.கே.சொக்கலிங்கம், பரமேஸ்வரன், ஊராட்சி மன்ற துணை தலைவர் மோகன், நெல் கொள்முதல் மாவட்ட கண்காணிப்பு குழு உறுப்பினர் ஆயலூர் ஏ.பி.வெங்கடேசன்வார்டு உறுப்பினர்கள் கிருஷ்ணகுமார், தியவா , கார்திக், டில்லி, முரசொலி, மதிவாணன், நிர்வாகிகள் ஜி.எம்.முரளி, ஜி.பாஸ்கர், நாகரத்தினம், பாண்டுரங்கன், சுதா, சுனில், கோபால், பிராபகர், கோ.மூர்த்தி, டி.குமார், உதயநிதி தரணி, எம்.டி.சி.மூர்த்தி, ராமனாதன், சந்திரபாபு, ஜெ.பாபு, ஜானகிராமன், மற்றும் அரசு அதிகாரிகள் விவசாயிகள் பொதுமக்கள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.